**25 பாலங்களை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டம் - 2022**

---

25 பாலங்களை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 886 ஆம் இலக்க 2014 சனவரி 30 ஆந் திகதிய கடன் உடன்படிக்கையின் உறுப்புரை 1 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம் குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அப்போதைய பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சாகிய தற்போதைய போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு நிறைவேற்றுமுகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். வாகனங்களின் செயற்பாடுகளையும் வீதி பராமரிப்புச் செலவுகளையும் மற்றும் பிரயாண நேரத்தையும் விபத்துக்களையும் குறைப்பதன் மூலம் குறித்த பிரதேசங்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்களுக்கு பங்களிப்புச் செய்வதற்கும் மற்றும் பயணிகளையும் பொருட்களையும் எடுத்துச் செல்வதற்குமான அதிகரித்த தேவைகளை நிறைவேற்றுவதற்காக மேற்கு, சப்ரகமுவ, கிழக்கு, தெற்கு, வடமேல், மத்திய, வடமேற்கு ஆகிய மாகாணங்களில் இரண்டு வழிகளையும் பாதசாரதி நடை பாதையையும் கொண்ட 25 பாலங்களை மீள்நிர்மாணிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். தொகுதி 01, 02 மற்றும் 03 என்பனவாக மூன்று கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 4,632 மில்லியனுக்குச் சமமான யு.எஸ் டொலர் 35.41 மில்லியனாக இருந்ததுடன் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2015 செப்தெம்பர் 07 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2017 செப்தெம்பர் 05 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதியானது தொடக்கத்தில் 2019 திசெம்பர் 31 அந் திகதி வரையும் பின்னர் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர்31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில்நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும்பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள்/ கணக்காய்வு அவதானிப்புக்கள் | தொகை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 05 இன் 43(அ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி நிலைமைக் கூற்றுக்குமான சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் உள்ளவாறான இறுதி வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தில் மாற்றப்படுதல் வேண்டும். எனினும் செயற்திட்டத்தின் கடன் மீதி தொடர்பான சமப்பாட்டு செம்மையாக்கல் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 3,772 | ஆண்டின் இறுதியில் சமப்பாட்டு செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்காததுடன் எதிர்கால நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இதனை பிரயோகிப்பதற்கு குறித்துக் கொள்ளப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட:டு நியமம் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 39 பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு நாணய பரிமாற்று வித்தியாசங்களின் விளைவான இலாபம் அல்லது நட்டம் ஒரு காசோட்டம் அல்லாததுடன் காசும் காசுக்குச் சமனானவைகளினதும் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளை ஒப்பீடு செய்து தொடர்புபட்ட விளைவுகள் பதியப்படுதல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான ரூபா 4 மில்லியன் தொகையான நாணயமாற்று வித்தியாசங்கள் நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசேட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. ஆகவே நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசேட்டம் அத்தொகையினால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | 04 | அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்கு குறத்துக்கொள்ளப்படுகின்றது. | இலங்கை பொத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுதல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரர் 2022 ஏப்லல் 22 அந் திகதி ரூபா 63 மில்லியன் இலாப இழப்பினை உள்ளடக்கி ரூபா 151 மில்லியனைக் கோரியிருந்தார். எனினும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் 100 ஆம் பிரிவின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 63 | அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்களை வெளிப்படுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில் ஒரு உடன்படிக்கை மேற்கொள்ளப்படாது அல்லது அங்கீகாரமின்றி பிரதான பாலங்கள் (MBC) செயற்திட்டத்திற்கு ரூபா 10 மில்லியன் மாற்றப்பட்டது. எனினும் MBC செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டு அந்த மீதியானது செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் MBC செயற்திட்டத்திடமிருந்து பெறவேண்டியதாக இன்னும் காட்டப்பட்டு வருகின்றது. | 10 | 2020 ஆம் ஆண்டளவில் MBCP மூடப்பட்டது ஆகவே இத்தொகையினை MBCP இடமிருந்து அறவீடு செய்வதற்கு முடியாதுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான தொகை பதியப்படுதல் வேண்டும். |
| (உ) | செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டில் எதுவித எழுத்துமூல உடன்படிக்கையும் செய்து கொள்ளப்படாது வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ரூபா 2 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் GOSL நிதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் உரிய அங்கீகாரமின்றி நிதிக்கூற்றுக்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | 02 | காணிப் பெறுகை கொடுப்பனவுகளைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்படாமையானது ஒரு பிரதான அம்சமாக இருந்தது. ஆகவே கொடுப்பனவுகளைத் தீர்த்துவைப்பதற்கு ரூபா 1.95 மில்லியன் தொகை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரத்துடன் நிதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைமகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமிமை/ கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளர்களின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 01/2019 ஆம் இலக்க 2019 மார்ச் 15 ஆந் திகதிய முகாமைத்துவ கூற்றறிக்கையின் 9.3 ஆம் உப உறுப்புரை | மீளாய்வாண்டில் ஒழுங்குபடுத்துதல் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. | கொவிட் -19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக குறைந்த எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் வேலைக்கு சமூகமளித்ததனாலும் 2022-06-08 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் நன்கொடையளிக்கும் முகவராண்மையால் கடன் இடைநிறுத்தப்பட்டதனாலும் திட்டமிட்டவாறு ஒழுங்குபடுத்துதல் குழுக்கூட்டம் நடைபெறவில்லை. | முகாமைத்துவ சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 252 மில்லியன் தொகையான பதினான்கு இடைக்கால கொடுப்பனவு கோரிக்கைகள் (IPC) வெளிநாட்டு நன்கொடையளிக்கும் முகவராண்மைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் முகவராண்மையானது மீளாய்வாண்டின் இறுதிவரை அத்தொகையினைச் செலுத்தியிருக்கவில்லை. ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் தாமதக் கட்டணங்களைச் செலுத்துவது ஆபத்தாக இருந்தது. | ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 169 மில்லியன் தொகையான இடைக்கால கொடுப்பனவு கோரிக்கைகள் (IPCS) 2022-06-08 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம் இடைநிறுத்தியுள்ளது. ஆகவே ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் 14.8 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு தாமதக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. | பண அளிப்புச் செய்தல் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தொகுதி 03 இன் பூர்த்தியாக்கல் திகதி 2022 செப்தெம்பர் 14 ஆக திருத்தப்பட்டிருந்த போதிலும் காலநீடிப்புச் செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் இடைக்காலப் பட்டியலான ரூபா 1,440 மில்லியன் செலுத்தப்படாததன் காரணமாக வேலைகள் 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி ஒப்பந்தக்காரரினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. எனினும் தொகுதி 03 இன் பௌதீக செயலாற்றலானது மீளாய்வாண்டின் இறுதியில் 90 சதவீதமாக இருந்தது. மேலும் இடைக்கால விலைப்பட்டியல்களுக்கு ரூபா 202 மில்லியன் கொடுப்பனவு செய்யப்படாததன் காரணமாக உடன்படிக்கையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு ஆலோசகர்களுக்கு தாமதக் கட்டணங்கள் செலுத்த வேண்டியுள்ளது. | இடைக்கால விலைப்பட்டியல்களின் ரூபா 74.9 மில்லியன் தொகையினை செலுத்தாமையின் காரணமாக ஆலோசகர் சிவில் வேலைகளின் மேற்பார்வையை 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார். பின்னர் கடன் உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் தொழில்தருனர் சிவில் நிர்மாண வேலைகளை 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார். | பாதிப்புக்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத வளங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 4,632 மில்லியனுக்குச் சமமான குவைத் தினார் (KWD) 10 மில்லியன் மொத்த கடன் தொகையில் ரூபா 4,128 மில்லியனுக்குச் சமனான குவைத் தினார் (KWD) 6.66 மில்லியன் மாத்திரம் உடன்படிக்கைத் திகதியிலிருந்து 9 ஆண்டுகளுக்குப் பின்னர் அதாவது 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. | உடன்பாடு செய்யப்பட்ட பாலங்களின் திருத்திய பட்டியல், குறைந்த செயல்முன்னேற்றத்தின் காரணமாக தொகுதி 1 இற்கான வெளிநாட்டு ஆலோசகரின் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டமை, தொகுதி 1 இன் ஒப்பந்தக்காரரின் மிகக் குறைந்த செயலாற்றல், தொகுதி 2 இன் பெறுகைச் செயன்முறை தாமதமடைந்தமை, கொவிட் - 19 தொற்றுநோய், 2022-06-08 ஆந் திகதியிலிருந்து நன்கொடைதாரரினால் பண அன்பளிப்புச் செய்தல் இடைநிறுத்தப்படல் என்பன தாமதத்திற்கான காரணங்களாகும். | கடன் நிதிகள் செயற்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும். |